இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 21 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆவணி 14 – வெள்ளிக்கிழமை 30 ஆகஸ்டு 2024 – மதுரை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 21 : Thiruvalluvar Year - 2055 - Aavani 14 - Friday 30 August 2024 - Madurai 12 Pages ₹ 5.00






தமிழ்நாட்டிற்கு புதிய தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்கு அமெரிக்கா சென்றுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு சான்பிரான்சிஸ்கோ விமான நிலையத்தில் அமெரிக்க நாட்டின் சான்பிரான்சிஸ் கோவிற்கான இந்திய துணைத் தூதர் ஸ்ரீகர் ரெட்டி, தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா மற்றும் அமெரிக்க வாழ் தமிழர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். திருமதி. துர்கா ஸ்டாலின் உடனுள்ளார்.

## அமெரிக்காவின் - சான்பிரான்சிஸ்கோ நகருக்குச் சென்றார்!

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு - அமெரிக்க வாழ் தமிழர்கள் உற்சாக வரவேற்பு!

## தொழில் முதலீட்டாளர்கள் சந்திப்பில் பங்கேற்று முதல்வர் உரை நிகழ்த்தினார் !

**சான்பிரான்சிஸ்கோ, ஆக. 30-**

**தொழில் முதலீடுகளை ஈர்க்க அமெரிக்கா பயணம் மேற்கொண்டுள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு அமெரிக்காவின் - சான்பிரான்சிஸ்கோ நகரில் அமெரிக்க வாழ் தமிழர்கள் திரண்டு இந்திய துணைத் தூதர் முன்னிலையில் விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளித்தனர்.**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டில் தொழில் தொடங்கிட அமெரிக்கத் தொழில் முதலீட்டாளர்களை இந்தப் பயணத்தில் சந்தித்து உரையாற்றுகிறார்.**

**சான்பிரான்சிஸ்கோ மாகாணத்தில் நேற்று நடைபெற்ற முதலீட்டாளர்கள் சந்திப்பில் பங்கேற்று உரையாற்றினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்றது முதல் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியில் தீவிர கவனம் செலுத்தி வருகிறார்.

### 31 லட்சம் இளைஞர்களுக்கு நேரடி – மறைமுக வேலைவாய்ப்பு!

2030-ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டில் ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதார வளர்ச்சி என்னும் இலக்கினை முன்வைத்து தமிழ்நாட்டிலும், மலேசியா, சிங்கப்பூர், ஜப்பான், ஸ்பெயின், அரபு நாடுகளிலும் தொழில் முதலீட்டாளர் மாநாடுகளை நடத்தி தமிழ்நாட்டில் தொழில் தொடங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டு வருகிறார். இதுவரை ரூ.9.74 இலட்சம் கோடி முதலீட்டில் 31 இலட்சம் இளைஞர்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் தொழில் வாய்ப்புகளை உருவாக்கியுள்ளார். இதுவரை 46 புதிய தொழிற்சாலைகள் மூன்றாண்டுகளில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

முப்பதுக்கும் மேற்பட்ட தொழிற்சாலைகளுக்கு அடிக்கல் நாட்டியுள்ளார். இவையெல்லாம் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மேற்கொண்ட தொழில் வளர்ச்சி முயற்சிகளுக்கு கிடைத்துள்ள மாபெரும் வெற்றிகளாகும்.

இவற்றைத் தொடர்ந்து தமிழ்நாட்டிற்கு தொழில் முதலீடுகளை அதிக அளவில் ஈர்ப்பதற்காகவும், படித்த இளைஞர்களுக்கு அதிக வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்காகவும் மேலும் பல புதிய தொழில்களை தமிழ்நாட்டில் உருவாக்கிட வேண்டும் என்னும் ஆர்வத்துடனும் அமெரிக்க நாட்டிற்கு பயணம் மேற்கொண்டுள்ளார்.



தமிழ்நாட்டிற்கு புதிய தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்கு அமெரிக்கா சென்றுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு சான்பிரான்சிஸ்கோ விமான நிலையத்தில் அமெரிக்க நாட்டின் சான்பிரான்சிஸ் கோவிற்கான இந்திய துணைத் தூதர் ஸ்ரீகர் ரெட்டி, தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா உள்ளிட்டோர் உற்சாக வரவேற்பு அளித்தனர். திருமதி. துர்கா ஸ்டாலின் உடனுள்ளார்.

### “வாய்ப்புகள் குவிந்துள்ள பூமியில் உள்ளேன்” -

**- முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்**

**அமெரிக்கப் பயணத்தையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், “வாய்ப்புகள் குவிந்துள்ள பூமியான அமெரிக்காவில் தற்போது உள்ளேன்” என்று தெரிவித்துள்ளார். “தமிழ்நாட்டின் செழுமைக்கு ஆதரவைத் தேடி வந்திருக்கிறேன்” என்றும் அப்பதிவில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.**

### சான்பிரான்சிஸ்கோ மாகாணத்தில் உற்சாக வரவேற்பு!

சென்னையிலிருந்து கடந்த 27.8.2024 (செவ்வாய்க்கிழமை) இரவு 10 மணியளவில் விமானம் மூலம் புறப்பட்டு அமெரிக்காவிலுள்ள சான்பிரான்சிஸ்கோ மாகாணத்திற்குச் சென்றுள்ளார். நேற்று (29.8.2024) சான்பிரான்சிஸ்கோ விமான நிலையம் வந்து சேர்ந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை அமெரிக்க வாழ் தமிழ் மக்கள் பெருந்திரளாகக் கூடி நின்று உற்சாகமான முறையில் வரவேற்பு அளித்தனர்.

அந்த நிகழ்ச்சியில் சான்பிரான்சிஸ்கோவிற்கான இந்தியத் துணைத் தூதர் ஸ்ரீகர் ரெட்டி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா ஆகியோரும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை மகிழ்ச்சியுடன் வரவேற்றார்கள்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சான்பிரான்சிஸ்கோ மாகாணத்தில் நேற்று நடைபெற்ற முதலீட்டாளர்கள் சந்திப்பில் பங்கேற்று உரையாற்றினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்த அமெரிக்கப் பயணத்தின்போது அங்குள்ள பல்வேறு தொழில் நிறுவனங்களைச் சேர்ந்த முதலீட்டாளர்களைச் சந்திக்கத் திட்டமிட்டுள்ளார்.

நாளை அமெரிக்க வாழ் தமிழர்களை சந்தித்து கலந்துரையாடுகிறார்.

சான்பிரான்சிஸ்கோவில் இருந்து செப்டம்பர் 2 ஆம் தேதி சிகாகோ நகருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பயணம் மேற்கொள்கிறார். அங்கு பல்வேறு தொழில் நிறுவனங்களின் நிர்வாகிகள் மற்றும் முதலீட்டாளர்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சந்தித்து தமிழ்நாட்டில் முதலீடு செய்யுமாறு அழைப்பு விடுக்கிறார். செப்டம்பர் 7 ஆம் தேதி சிகாகோவில் தமிழர்களுடனான மாபெரும் சந்திப்பு நிகழ்ச்சியிலும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொள்கிறார். செப்டம்பர் 14 ஆம் தேதி சென்னை திரும்பும் வகையில் முதலமைச்சரின் பயணத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

### சிகாகோவுக்கு வரும் முதல்வருக்கு வரவேற்பு!

இதனிடையே செப்டம்பர் 2 ஆம் தேதி சிகாகோ வரும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை வரவேற்க அங்குள்ள தமிழர்கள் தயாராகி வருகின்றனர். தமிழர்களின் பாரம்பரிய முறைப்படி வரவேற்பு அளிக்க சிகாகோ தமிழ்ச் சங்கம் சார்பில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் ஒரு பகுதியாக முதலமைச்சரை வரவேற்க தமிழகத்தை பூர்வீகமாகக் கொண்ட பொன் பறை இசைக்குழுவினர் நடனம் ஆடியும், பறை இசைத்தும் ஒத்திகை நிகழ்ச்சியில் ஈடுபட்டனர்.

மேலும், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.